# காசிபாளையம் (கோபி) பேரூராட்சி

## 2010–11ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத்தொகை அலுவலக கட்டிடம் கட்டுதல் மற்றும் மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டுதல்.

ந.க.எண்.267/2009 நாள்: 06.12.2010.

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்**

## மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஈரோடு மாவட்டம், காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் 2010–11ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத்தொகை திட்டத்தில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2010–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14–ம் நாள் செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இப்பேரூராட்சி அலுவலகத்தில் 13.12.2010 திங்கட்க்கிழமை மாலை 5.00 மணி வரை உரிய தொகையினை ரொக்கமாக மட்டுமே செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் முன் வைப்புத்தொகையை 13.12.2010 அன்று மாலை 5.00 மணிக்குள் செலுத்தி உரிய ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். மேலும், பணிகள் தொடர்பான இதர விவரங்களை அலுவலத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

### பொது நிபந்தனைகள்.

1) டெண்டர் போட விரும்புவோர் கீழே கண்ட வேலைக்கு டெண்டர் டெபாசிட்டாக அதன் எதிரே குறிப்பிட்ட தொகைக்கு இவ்வலுவலகத்தில் ரொக்கமா 14.12.2010–ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குள் செலுத்திய இரசீதினை டெண்டருடன் இணைக்கப்படவேண்டும்.
2) ஒப்பந்ததாரர் பேரூராட்சியில் பதிவு பெற்று ஆண்டு தோறும் புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
3) ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத்தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4) செலுத்தப்படும் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது டேவணித் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும்.
5) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணமும் கூறாமல் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ, செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
6) ஒப்பந்ததாரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணம் இல்லாமல் விலக்கிக்கொண்டால் டெண்டரை எற்றுக்கொள்பவர் முடிவு செய்ய வேண்டும் அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

7) ஒப்பந்ததாரர் தமக்கு அளிக்கப்பட்ட பணியினை வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது.

8) ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், காசிபாளையம் (கோபி) பேரூராட்சி–என்ற முகவரியிட்டு, கொடுக்கவேண்டும். உறையில் ஒப்பந்ததாரின் முழு அஞ்சல் முகவரி இருக்கவேண்டும்.

9) வேலை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்கவேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்பிற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

10) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட பின்பு, பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித்தொகையையும், மேலே கண்டுள்ள பத்தி 8.ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரின் வைப்புத்தொகையை எவ்வித முன்அறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.

11) குறிப்பிட்ட தேதியில் வேலையை ஆரம்பிக்காவிட்டால், ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கான செலுத்தப்பட்ட டேவணித்தொகையை பறிமுதல் செய்ததாக கருதப்பட்டு பேரூராட்சி நிதியில்சேர்க்கப்படுவதுடன், அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்கவேண்டும்.

12) கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரளால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரளால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்ததாரர் சேகரித்தல் வேண்டும். தவறினால், நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சி பொருட்களாக கருதி, அப்புறப்படுத்தப்படும்.

13) யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ, அவரால் செலுத்திய டேவணித்தொகை, விண்ணபத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

14) வேலையை முடித்த பின்னர் பட்டியலில் கீழ்க்காணும் தொகைகள் கழித்து கொள்ளப்பட்டு, மீதித்தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) கூடுதல் வைப்புத்தொகை. | – | 2½% |
| ஆ). வருமான வரி | – | 2% |
| இ). வருமான வரி மேல்வரி | – | 10% |
| ஈ) கல்வி சேவை வரி (வருமான வரி மேல் வரி ) | – | 2% |
| உ). விற்பனை வரி | – | 2% |
| ஊ). விற்பனை வரி மேல்வரி | – | 5% |
| எ) கட்டிட தொழிலாளர் நல நிதி | – | 0.03 % |

15) தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கையில் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான், அவ்வேலைக்கான ஒப்பந்தக்காரரால், செலுத்தப்பட்ட டேவணித்தொகை விண்ணபத்தின்பேரில் திருப்பித் தரப்படும்.

16) பணிகளுக்கு ரோலர், கலவை இயந்திரங்களை சொந்த ஏற்பாட்டின் பேரில் பயன்படுத்தி உரிய காலத்திற்குள் வேலைகளை முடிக்க வேண்டும்.

17) டெண்டர் கோரும் நாளை நிர்வாக நலன் கருதி, எக்காரணமும் காண்பிக்காமல், தள்ளி வைக்கவோ, அல்லது மறு டெண்டர் கோரவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

18) பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு டெண்டர் உறுதி செய்யப்படும்.

19) டெண்டர் அங்கீகரிக்கப்பட்டு வேலை உத்திரவு பெற்ற ஒரு வார அவகாசத்திற்குள் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

20) பணியினை உரிய காலக்கெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், வேலையை உரிய காலத்திற்குள் தவறாமல் முடித்து இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும்.

21) அரசிடமிருந்து அவசர கால உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அவ்வுத்திரவின்படி விதிமுறைகள் செயல்படுத்தப்படும்.

22) இந்த ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

23) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை ரூ.5.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கான http://townpanchayats.tn.gov.in என்ற பேரூராட்சிகளின் இணைய தளத்திலும், ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்காக http://www.tn.gov.in என்ற தமிழக அரசு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

24) இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.

25) e-tender மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து, ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் (ரூ) | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (ரூ) | டெண்டர் ஷெட்யூல் பாரம் (விற்பனை வரி உட்பட) (ரூ) | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | **<u>இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி 2010-11</u>** பேரூராட்சி அலுவலக வளாகத்தில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல். | **20.00** | 40000 | 6126 | **120** நாட்கள் |
| 2 | காசிபாளையம் வார்டு எண். 12 ராமசாமி வீதியில் 60000லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை குடிநீர் தொட்டி அமைத்தல். | **5.00** | 10000 | 3063 | **120** நாட்கள் |

செயல் அலுவலர்,
காசிபாளையம் (கோபி) பேரூராட்சி.
ஈரோடு மாவட்டம்.

பெறுநர்.—
காசிபாளையம் (கோபி)பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்

<u>நகல்.</u>—

1) அலுவலக விளம்பரப்பலகைக்கு.
2) பேரூராட்சிகள் ஆணையர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3) பேரூராட்சிகள் செயற்பொறியாளர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4) ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
5) பேரூராட்சி உதவி இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
6) உதவி செயற்பொறியாளர் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு – 11.
7) உதவிப்பொறியாளர், பேரூராட்சி தொகுதி, லக்கம்பட்டி பேரூராட்சி.
8) செயல் அலுவலர், லக்கம்பட்டி, அரியப்பம்பாளையம், கொளப்பலூர், ஆகிய பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.